## தேசிய இளைஞர் படையணி - 2016

---

தேசிய இளைஞர் படையணியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் படையணியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2018 செப்தெம்பர் 06 ஆம் திகதி படையணியின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் படையணியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி படையணியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 118 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றில் திரண்ட இலாம்/ (நட்டம்) மொழிபெயர்ப்பு ஒதுக்கமொன்றாக காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்காக கிடைக்கும் போது சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படுகின்ற போதிலும் படையணியினால் அதற்கு முரணாக சொத்துக்களை கொள்வனவு செய்த ஆண்டின் போது பெறுமானத்தேய்விடுவதற்காக கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 761,743 பெறுமதியான கிணறு பயன்பாட்டிற்காக 2017 யூன் 06 இலேயே தயார்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அது காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டு வருடாந்த பெறுமானத்தேய்வாக ரூபா 38,087 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டிற்கான இயலளவை கட்டியெழுப்புதல் செலவினம் ரூபா 8,898,052 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பயிற்சிப் பிரிவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அச் செலவினம் ரூபா 8,578,220 ஆக இருந்ததனால் ரூபா 319,832 வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | அட்டுறு செலவினங்கள் - தொழில்சார் பயிற்சி (ஆண்டின் போது மீதி குறைவடைந்தமை) | 336,600 | தீர்ப்பனவு தொடர்பான உறுதிப்படுத்தல் |
| (ஆ) | தொழில்சார் பயிற்சி செலவினங்கள் | 13,452,896 | பயிற்சியாளர் குறைவான பயிற்சிக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த நிறுவனம் தொடர்பான தகவல்கள் |

**2.3 பெறவேண்டிய பணம்**

தேசிய இளைஞர் படையணிக்கு வெளி நிறுவனம் ஒன்றிற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த மின்சாரம் மற்றும் நீர் செலவினங்களிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,182,203 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,180,075 ஆக ரூபா 4,362,278 கூட்டுமொத்தமான தொகை 2016 திசெம்பர் 31 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 2(4) ஆம் பிரிவின் பிரகாரம் இளைஞர் படையணிச் சபையின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்குத் தேவைப்படக்கூடிய தொழிற்பயிற்சிகள், இளைஞர் அபிவிருத்தி மற்றும் நிறுவுதல் ஆகிய நோக்கங்களிற்காக மூன்று குழுக்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான படையணியின் தொழிற்பாடுகள் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் ரூபா 11,053,605 பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 45,241,241 மிகையை விளைவித்திருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 56,294,846 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மானியங்கள் உள்ளடங்கலாக மொத்த வருமானம் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் போது படையணியின் வருமானம் ரூபா 806,652,133 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 291,479,858 அதாவது 36 சதவீதம் ஆண்டின் போது சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஊழியர் ஊதியங்களிற்காகவும் ரூபா 224,657,531 அதாவது 27 சதவீதம் மாணவர்களிற்கான படிகள், பயிற்சி மற்றும் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காகவும் செலவிடப்பட்டிருந்தன.

பாதீட்டு முன்மொழிவுகளின் கீழ் படையணிக்கான புதிய நிலையங்களை நிர்மாணிக்கும் ஆரம்ப செயற்திட்டங்களிற்கான ரூபா 548,467,200 தொகை மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் 13 புதிய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மீண்டெழும் செலவினங்களிற்காக ரூபா 170,878,675 தொகையும் மூலதனச் செலவினங்களிற்காக ரூபா 377,588,525 தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

எனினும் இச் செலவினங்களில் அதிகமானவை காணப்படுகின்ற நிலையங்களில் உள்ள பயிற்சியாளர்களிற்கான உணவுகளை வழங்குவதற்கும் சீருடைகளை வழங்குவதற்கும் பயிற்சி நிலையங்களின் திருத்தங்களிற்காகவும் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான படையணியின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| விகிதம் | 2016 | 2015 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.57:1 | 6.11:1 |
| விரைவு விகிதம் | 1.04:1 | 0.79:1 |

நடைமுறை விகிதம் குறைவதற்கு காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்தலும், விரைவு விகிதம் அதிகரிப்பதற்கு காரணமாக காசு மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் அதிகரித்தலும் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இளைஞர் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி என்பன படையணியின் நோக்கங்களாகும். அந் நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் முதலாம் மற்றும் இரண்டாம் குழுக்களிற்காக 11,978 பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிற்சியாளர்களில் 4,515 பயிற்சியாளர்கள் விலகியிருந்ததுடன் 7,463 பயிற்சியாளர்கள் கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருந்தனர். எனினும் கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்த பயிற்சியாளர்களில் 5,762 பயிற்சியாளர்கள் மாத்திரமே தேசிய தொழில்சார் தகைமைச் சான்றிதழிற்காக தோற்றியிருந்தனர். 5,342 பயிற்சியாளர்கள் மதிப்பீட்டு பரீட்சையில் சித்தியெய்தியிருந்த போதிலும் 4,397 சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் 945 பயிற்சியாளர்கள் தேசிய அடையாள அட்டை போன்றவை காணப்படாததன் காரணமாக சான்றிதழ்களை பெற்றிருக்கவில்லை. கற்கைநெறி பூர்த்திசெய்யப்படுதல் தொடர்பான பரீட்சிப்பின் போது நிலையங்களின் எண்ணிக்கை 35 இலிருந்து 48 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் கற்கைநெறிகளின் செயன்முன்னேற்றம் 68 சதவீதத்திலிருந்து 62 சதவீதம் வரை குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவுகளின் பிரகாரம் 13 புதிய நிலையங்கள் படையணியால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 1,264 மாணவர்கள் இந் நிலையங்களிற்குரிய 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 645 மாணவர்கள் அல்லது 51 சதவீதத்தினர் கற்கைநெறிகளை விட்டு விலகிச் சென்றிருந்தனர்.

(இ) மீளாய்வாண்டிற்காக ரூபா 13,452,896 செலவிட்டு படையணியால் தொழிற்பயிற்சிக்கு 3,523 மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் 1,060 மாணவர்கள் கற்கைநெறியை விட்டு விலகிச் சென்றிருந்தனர்.

(ஈ) அரையாண்டு ஒன்றிற்கு தம்புள்ள ஹோட்டல் பாடசாலையால் வழங்கப்படக்கூடிய சராசரி மாணவர் இயலளவு ஏறத்தாழ 250 ஆகும். 57 மாணவர்கள் மாத்திரம் முதலாம் அரையாண்டு கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் ரூபா 4,003,270 செலவிட்டு இரண்டாம் அராயாண்டு கற்கைநெறியை 233 மாணர்கள் பூர்த்தி செய்திருந்தனர். ஹோட்டல் பாடசாலையின் வளங்களைப் பயன்படுத்துதல் திருப்திகரமான மட்டத்தில் இருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டில் 7,463 மாணவர்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் 5,226 மாணவர்கள் பூர்த்தி செய்திருந்தனர். எனினும் வெளியேறல் செலவினங்கள் முறையே ரூபா 6,423,121 மற்றும் ரூபா 13,832,168 ஆனதுடன் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வெளியேறல் செலவினம் அனைத்தும் வெளியேறல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்காதமையே இதற்கான காரணமாகும்.

## 4.2 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 68 ஆவது சுதந்திர தின அணிவகுப்பில் பங்குபற்றியதற்காக ரூபா 263,176 செலவினம் இளைஞர் படையணிக்கு ஏற்பட்டிருந்ததுடன் நிறுவனத்தின் நோக்கங்களுடன் இது இணங்கியிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ஹோட்டல் கற்கைநெறிக் கட்டணமாக பயிற்சியாளர்களிடமிருந்து ரூபா 440,900 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய கற்கைநெறிகள் தொடர்பில் கட்டணங்களை அறவிடுவதற்காக சபையிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரம் தொடர்பான விபரங்கள் அல்லது கற்கைநெறிக் கட்டணங்களை தீர்மானித்தல் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது 13 வெளிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் வருமானமாக ரூபா 1,908,075 தொகை பெறப்பட்டிருந்ததுடன் செலவினமாக ரூபா 1,166,328 தொகை ஏற்பட்டிருந்தது. வெளி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக படையணியின் சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக எந்த அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன மற்றும் செலவின விபரங்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது 15 பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிற்காக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கல்விச் சுற்றுலாவிற்காக 665 பயிற்சியாளர்களும் 115 பதவியணியினர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 780 பேர் பங்குபற்றுவதற்காக எதிர்பார்க்கப்பட்டது. எனினும் உள்ளபடியாக 558 பயிற்சியாளர்களும் 163 பதவியணியினர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 721 பேர் பங்குபற்றியிருந்ததுடன் இதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 3,328,514 ஆகும். அதன் பிரகாரம் பயிற்சியாளர்களின் பங்குபற்றல் அதிகரிப்பதற்குப் பதிலாக பதவியணியினர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதல் அதிகரித்திருந்ததுடன் கல்விச் சுற்றுலாவிற்காக பயிற்சியாளர்கள் பங்குபற்றும் நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(உ) சீனா அரசாங்கம் தம்புள்ள, காலி மற்றும் திக்வெல்ல படையணி நிலையங்களில் மும்மொழி ஆய்வுகூடங்களை ஸ்தாபிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13 மில்லியனை வழங்கியிருந்த போதிலும் தம்புள்ள ஆய்வுகூடம் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,580,520 பெறுமதியான 588 அலுவலகக் கதிரைகள் மற்றும் ரூபா 24,682,320 பெறுமதியான விரிவுரை மண்டக் கதிரைகள் என்பன 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் திவுலாபிட்டிய மற்றும் படுவஸ்நுவரவிலுள்ள களஞ்சியங்களில் விளைவற்றிருந்தன. இந் நிலைமைக்கான காரணம் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதம் என பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

(ஆ) நுவரெலியாவிலுள்ள நிலையக் காணியில் அமைந்துள்ள நிலைய அத்தியட்சகர் விடுதியை சுற்றுலா விடுதியாக அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,239,971 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச் சுற்றுலா விடுதியை பயன்படுத்துவதற்காக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் கட்டிடம் குறைப்பயன்பாட்டில் இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,151,580 பெறுமதியான 07 உருப்படிகளிற்குரிய 43 பொருள் அலகுகள் 2018 செப்தெம்பர் 20 வரையிலும் யக்கல பிரதான களஞ்சியங்களில் விளைவற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.4 முறையாக கையளிக்கப்பட்டிருக்காத காணிகள்/ ஆதனங்கள் மீது செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

படையணியால் பயன்படுத்தப்படுகின்ற கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரிமைத்துவம் படையணிக்கு காணப்படாததால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணியின் பெறுமதி குறிப்பிடப்பிடப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. எனினும் அவ்வாறு காணிகளின் உரிமைத்துவம் சட்ட ரீதியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டில் கட்டிடங்களிற்கான சேர்த்தல்களாக ரூபா 66,469,092 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 880 ஆக இருந்ததுடன் அது 509 நிரந்தர பதவியணியினர், 311 ஒப்பந்த அடிப்படையிலான பதவியணியினர் மற்றும் மணித்தியால விலைவீத அடிப்படையில் பணியாற்றும் 60 பதவியணியினரைக் கொண்டிருந்தது. நிரந்தரப் பதவியணியினரில் 93 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களிற்காக ஒப்பந்த அடிப்படையில் 46 பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அப் பதவிகள் ஆங்கிலம், தமிழ் மற்றும் தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர்களிற்கானதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்த அடிப்படைப் பதவியணியில் 66 வெற்றிடங்களும் மணித்தியால விலைவீத அடிப்படைப் பதவியணியில் 4 வெற்றிடங்களும் காணப்பட்டன.

**4.6 வாகனப் பயன்பாடு**

ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான படையணியால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 35,401,000 பெறுமதியான 10 வாகனங்கள் படையணியின் மோட்டார் வாகனங்களாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இது நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மோட்டார் வாகன பெறுமதியில் 91 சதவீதமாக காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஏறத்தாழ ஒரு ஆண்டு தாமதத்துடன் 2018 பெப்ரவரி 20 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 11 செலவின விடயங்களிற்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளிற்கு இடையே 72 சதவீதம் தொடக்கம் 100 சதவிதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

#### 5.3.1 பெறுகை

**(அ) பிரதான பெறுகைத் திட்டம்**

பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டத்தை படையணி தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) பெறுகை வழிகாட்டியிலிருந்து விலகுதல்**

(i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3.2(இ) இன் பிரகாரம் குறிப்புரைகள் உள்ளடங்கிய கேள்வி ஆவண வரைபை தயாரித்து அவற்றினை மீளாய்வு செய்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது கேள்வி கோரப்படும் காலப்பகுதி முடிவடைந்த பின்னரே நியமனம் செய்யப்பட்டிருந்தது.

(ii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 இன் பிரகாரம் வற் (VAT) கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பெறுகை செயன்முறையிலுள்ள குறைபாடுகள்**

(i) 2016 மார்ச் 17 ஆம் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை செயன்முறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 7,176,000 பெறுமதியான பன்னிரண்டு முச்சக்கர வண்டிகள் அங்கீகாரம் பெறப்பட முன்னர் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் முச்சக்கர வண்டிகளின் விபரங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. முச்சக்கர வண்டிகள் பயிற்சி நிலையங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் சாரதி பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காததால் சாரதிகளாக காணப்படாத பயிற்சி நிலையங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் அவ் முச்சக்கர வண்டிகளை செலுத்தியிருந்தனர்.

(ii) பயிற்சியாளர்களிற்கு சீருடைகளை விநியோகிப்பதற்காக பெறப்பட்ட தரச் சான்றிதழில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் கையொப்பம் காணப்படாததன் காரணமாக நிறுவனம் அனுப்பிய ஆகக் குறைந்த விலை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 64,950,053 தொகையான இரண்டாவது ஆகக் குறைந்த கேள்வியை அனுப்பிய நிறுவனத்திற்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது.

(iii) 5,000 காற்சட்டைகள், 3,196 சேட்கள், 10,000 வெள்ளை பனியன்கள், 500 பட்டிகள், 620 "பெரட்ஸ்" தொப்பிகள் மற்றும் 1,299 சோடிக் காலணிகள் போன்ற உருப்படிகள் உள்ளடங்கலாக சீருடை தொகுதியை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,666,162 செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iii-i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6.1 இன் பிரகாரம் வழங்கப்படுகின்ற சீருடைகளில் சேட்டிற்காக குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் "குறிப்புரை" இன் அடிப்படையில் ஆகக் குறைந்த விலை தெரிவு செய்யப்படாததன் காரணமாக ரூபா 1,000,000 மேலதிகக் கொடுப்பனவு ஏற்பட்டிருந்தது.

(iii-ii) சீருடைத் தொகுதியில் சேட்கள் மற்றும் காற்சட்டைகளிற்காக தகுதிவாய்ந்த நிறுவனமொன்றிடமிருந்து தர அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு முன்னரே கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

(iii-iii) நீளக் காற்சட்டைகள் மற்றும் பனியன்களை வழங்குகின்ற பெறுகை வழங்கப்பட்டிருந்த தனியார் நிறுவனத்தால் 2016 திசெம்பர் 02 இல் 500 நீளக் காற்சட்டைகள் மற்றும் 500 பனியன்கள் ஏன்பன யக்கல பிரதான களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 05 ஆம் திகதியிலேயே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

## 5.4 ஆண்டறிக்கைகளை பட்டியல்ப்படுத்துதல்

2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது 56 நிர்மாணங்களிற்காக ரூபா 1,616,321,467 தொகையான உடன்படிக்கை பெறுமதிக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 218,231,200 தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணங்களாக செலுத்தப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றத்தின் பிரகாரம் 02 நிர்மாணங்கள் மாத்திரம் 45 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய நீர்மாணங்களின் செயன்முன்னேற்றம் 5 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் படையணியின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையானவாறு கணக்கீட்டு முறைமையொன்று பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | பதிவேடுகளை பேணுவதிலுள்ள நலிவுகள். |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | செலவின விடயங்களிற்கான மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றிற்கிடையே முரண்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | தகவல் முறைமையை பேணுதல் | அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் முறைமை நாளதுவரையாக்கப்பட்டு சரியான தகவல்கள் இலகுவாகவும் விரைவாகவும் பெறப்படாமை. |
| (உ) | பெறுகை | முறையற்றவாறு பெறுகை கோவைகள் பேணப்படுதல் மற்றும் பெறுகை நடைமுறையிலுள்ள குறைபாடுகள். |